உ
சிவமயம்



இஃது
யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த
துன்னையம்பதி வாசரும்,
வீரசுந்தர முதலியார் மரபினரும்
உயர்சைவ குலதிலகரும்
கந்தச் சாத்திரியார் வழித்தோன்றலுமாகிய
திரு. சிதம்பரநாதர் கணபதிப்பிள்ளை அவர்களின்
அன்பு மகனும்
திருமதி அன்னம்மா அவர்களின்
அன்புக் கணவனுமாகிய
திருவாளர்

# க. சிதம்பரநாதன்

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)
அவர்களின் யாக்கை மறைவுகுறித்த

# நினைவு மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவழி நடந்து

இறையடியடைந்த



அமரர்

# கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன்

மண்ணுறவு:
08 – 09 – 1921

விண்ணுறவு:
13–01–1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# இறை துதி

## துன்னை, கொட்டிக்குளிப்பான் பிள்ளையார்

உண்டதிங் கோர்பொழு துன்னை நினைந்ததோ எப்பொழுதும்
கண்டது கைதொழு தேத்திய தல்லாற் பிறவறியேன்
மண்டலம் கொட்டிக் குளிப்பா னமர்ந்த விநாயகனே
கொண்டிடு வாய்திருப் பாதம் தனிலிது போதினிலே.

நின்றெதி ரிட்ட கயமுகன் தன்னைநீ மூசிகமாய்
நன்றுரு மாற்றி அடியிடை ஏற்றிட்ட வாறதுபோல்
என்று முனைப்பணிந் தேத்திய என்னை யுவந்தழைத்தே
துன்று மலரடி சாரும் வகையருள் செய்திடுமே.

சிந்தினன் கண்ணுறு நீர்திரு வீதியின் நின்றுருகி
வெந்தனன் மெய்சிலிர்ப் பாகிட நின்னடி யேத்தினனே
வந்தனன் பூமி யுறவறுத் துன்தாள் பணிந்திடவே
தந்திடு பாதம் தனைச்சேரும் பேறு துதித்தனனே.

## துன்னை, வல்லியானந்தப் பிள்ளையார்

நீறிட்ட னன்திரு வீதியும் சுற்றினன் துன்னையிலே
வீறுற்ற வல்லியா னந்தத்து ஐங்கர னேயுனது
பேறுற்று யர்ந்திடும் பேராசை கொண்டே துதித்தனனே
வேறிற்றை நாள்வரை வேண்டிலன் பொன்னடி வைக்குதியே.

தம்பிக் குதவ வனத்திடை யேமத மாக்களிறாய்
தும்பிக் கரத்தொடு வந்தவ நாளும் பணிந்தவனை
உம்பர்க் கரிய ஒளியடிக் கண்ணே அழைப்பதெப்போ
நம்பிப் பணிந்தேன் விநாயக நாடி நலமளியே.

பட்டுக் குடைநிழல் பல்லலங் காரம் பொலிவுடனும்
எட்டும் வரத அபய கரங்களும் கொண்டுவந்தெம்
இட்டம் எதுவது கண்டே அருளும் கயமுகனே
கிட்டும் படியடிப் பேற்றினை ஈவாய் துதித்தனனே.

— மன்னவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வாழ்வு

தெய்வம் பேணித் தீநெறி கடந்து நல்லறம் புரிந்து நலம் பெறும் துன்னையில், இளான் எனப் பேசிடும் கவினுறு திருநிலத்து, உயர்தவச்சைவ நெறியது கண்ட திரு. சிதம்பர நாதன் கணபதிப்பிள்ளையும் செல்வியாம் கதிரேசு சின்னம்மாவும் வாழ்விலிணைந்து இறையடி போற்றினர்.

போற்றிய பேறாய் வந்தவர்தான் திரு. க சிதம்பரநாதன். குறுகுறு நடந்து மழலைகள் பேசி வளர்ந்தவர் கட்டைவேலி மிசனறிப் பாடசாலையில் தொடக்கக் கல்வியைப் பெற்றுச் சிறந்தார். தொடர்ந்து, கரவை விக்னேஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றார்.

வாலிபம் வந்தது. ஊர்காவலர்ப் படையிற் சேர்ந்து குறுகியகாலத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஆனார்.

அன்புக்கியைந்த துணைவியாக 1944-ல் வேலுப்பிள்ளை அன்னம்மாவை ஏற்று அறம்புரிந்தார். தெய்வம் தொழுது தினம் பணிந்திட்டனர்.

பெறுமவற்றுட் சிறந்தது மக்கட்பேறு. அத்தகைய பேறு பெற்றவரானார்.

நான்கு ஆண்களும் ஒரு பெண்குழந்தையும் பெற்று மிகு மனநிறைவுடன் வாழ்ந்தார்.

கண்ணின் மணிகளான குழந்தைகளைக் கனிவோடு பண் போடு வளர்த்தெடுத்தார் தம்முடைய பதவிக்காலத்தின் ஆரம்ப காலத்திலேயே சார்ஜன்ட் பதவிபெற்று, எவர்களாலும் 'நாதன்' என்று அழைக்கப்பட்ட அவர் கடமையிற் தவறாத கண்ணியத்துடனான கட்டுப்பாட்டாளனாக விளங்கினார்.

தமிழ், சமயம் தனது இரு விழிகள் எனக்கொண்டவர். மொழிப்பற்றின் காரணமாக அன்று ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தினால் கடமையிலிருந்து விலகிக்கொண்ட ஒரு தமிழபிமானி இவர். அதேபோல, கொட்டிக்குளிப்பான் விநாயகர், வல்லியானந்தப் பிள்ளையார், வல்லிபுர ஆழ்வார் முதலிய ஆலயங்களையடைந்து வழிபாடியற்றி மனநிறைவுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமய அபிமானியுமாவார். தமிழ், தமிழ் என்றுசொல்லி தன்மொழியின் பெருமைபேசி இறப்புவரை அவ்வுரையாடல் களால் மனநிறைவடைந்தார்.

ஆரம்ப காலத்தில் நாதன், நாதன் என்றழைக்கப்பட்டவர். பொலிசப்பா என்றழைக்கப்பட்டு கனிந்த வார்த்தை, இனிய சுபாவம் கொண்டு எல்லோர் மனங்களையும் கவர்ந்திருந்த கண்ணியனிவர்.

மக்கட் பேற்றுடன் பேரர்களையும் பெற்று அணைத்து மழலைகேட்டு மகிழ்ந்த பெரியவரை அவர்கள் அட்டப்பா அட்டப்பா என்றழைக்க அடங்காத பூரிப்புக் கொண்டிருந்த பெருமகன் 13-01-1992 அன்று வணங்கிய தெய்வ பதந்தனை விரும்பி இவ்வுலக வாழ்வை நீக்கி அமரரானார்.

சாந்தி.

இறையடிப் பேறுற்ற

துன்னை கிளான் பெருநிலத்து

**திரு. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன்**

**(பொலிஸ் சார்ஜன்ட்)**

அவர்களின் பிரிவுகுறித்த

# கையறு நிலைப்பாடல்

## திதி வெண்பா

தக்கபிர சோற்பத்தி மார்கழியைச் சார்பூர்வ
பக்கத்தி னட்டமியே பண்புநலம் — மிக்கவனாய்த்
தேசமைந்தா ரெங்கள் சிதம்பரநா தன்கைலை
ஈசனடி யுற்றுயர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி அன்னம்மா இரங்கல்

பெருகிவரும் அன்புடன் என்னுடன் பழகிய
பெருமையை நினைந்தழுவனோ
பெற்றிட்ட மக்களின் உயர்வினுக் காகவே
பட்டவைகள் நினைந்தழுவனோ
ஒருபொழுதும் சுடுமொழியை உரைத்திடா அன்புமலி
உள்ளமது நினைந்தழுவனோ
உத்தியோ கச்சிறப் போடுலகம் மதித்திடச்
செய்தவைகள் நினைந்தழுவனோ
கருகிமனம் அழிகிறேன் விதவை யாக்கியே
கடந்ததை நினைந்தழுவனோ
கண்ணிலினி நீர்பெருக ஒதுங்கியே விழவரும்
காலமதை நினைந்தழுவனோ
உருகுதே நெஞ்சமிது உணர்வழிந் தேங்கியே
உலைகிறேன் மலைகிறேன்நான்
ஒளியிழந் தேன்வாழ்வு இருளாக வாடுகிறேன்
என்னினிச் செய்குவேனோ.

## மக்கள் இரங்கல்

**தெய்வேந்திரராசா** *(ஓய்வுபெற்ற P. W. D. ஓவசியர்)*
**ஆனந்தராசா** *(தீயணைக்கும்படை அதிகாரி யாழ்ப்பாணம்)*

தடையுடைத்துப் பாய்கின்ற கங்கை போல
தந்தீர்கள் பாசத்தைப் பரிவி னோடு
உடையுணவு கல்விநலம் எல்லாம் தந்தே
உயர்நிலைக்கே ஆளாக்கி விட்ட ஐயா
படிதனிலே நெஞ்சுருகி மாய விட்டுப்
பறந்ததென்ன மாயமையா தேம்பு கின்றோம்
சுடுசுடலைத் தீயிடையே கொள்ளி யிட்டோம்
சோகமிக வாகிநலி கின்றோம் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சிதாதேவி இரங்கல்

B. A. Dip in - (M. H. S. பருத்தித்துறை)

சூழ்நலங்கள் எல்லாமே தேடித் தந்து
சிறப்புறவாழ்ந் திடவைத்த ஐயா நானே
வாழ்விழந்து வலியிழந்து நின்ற போதும்
வாடவிடேன் என்றுதவி செய்தீர் இன்று
பாழுடலம் விட்டோடிப் போன தாலே
பரிதவித்துக் கிடக்கின்றேன் பதறு கின்றேன்
ஆழகடலிற் திசைமறந்த படக தானேன்
ஆகொடிய விதியேநீ என்செய் தாயே.

படுத்துக் கிடந்திட்ட கட்டிலும் நாளும் அழகுபெற
உடுத்துக் கழித்த உடைகளும் தேவைக்கு நீங்களிங்கே
எடுத்துப் புழங்கிய ஆயுதம் என்பவை காணுகையில்
துடித்துக் கதறிடச் செய்கிற தேதுயர் மண்டியதே.

## மக்கள் இரங்கல்

மகேந்திரராசா (U. K)

குலேந்திரராசா (இலத்திரனியற் பொறியியலாளர், ஒல்லாந்து)

பரிந்தணைத்தே எடுத்துவளர்த் திந்த வாறு
புகழுறவே ஆக்கியஎம் அப்பா நாங்கள்
விரும்பிவர வேற்றிடுவீர் என்றி ருந்தோம்
வேதனைப்பட டழவிட்டு மரணம் தன்னைப்
பொருந்தியதேன் அக்காவும் அம்மா தானும்
புலம்பியழும் காட்சிதான் காணு வோமோ
எரிந்தழிக்கும் தீயிடையிற் சாம்ப லாகி
விட்டீரோ ஐயையோ கரைகி றோமே.

அள்ளிக் கொடுத்திட்ட ஐயாவுன் பக்கத் திருக்கவில்லை
கொள்ளி தலையிடை வைத்திட வில்லை அரிசியையும்
கிள்ளியுன் வாயிடை வைத்திட வில்லை கதறுகிறோம்
உள்ளம் உடைந்தே உருகிக் கதறினம் என்செய்வமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் இரங்கல்

தந்தைதரும் அன்புதனை வேறிடத்திற்
 தான்பெறலும் முடிவதுண்டோ என்பர் எங்கள்
சிந்தைநிறை மாமாவே நீங்கள் பாசம்
 தான்சொரிந்து பழகினிரே மாண்டதாலே
வெந்தழிகின் றோமிங்கே வெதும்புகின்றோம்
 வேதனையின் விளிம்புக்கே ஆனோம் சோகம்
எந்தவித மானாலும் மாற்ற மாட்டோம்
 எம்தன்பு மாமாநாம் கதறினோமே.

## மறுமருமக்கள் இரங்கல்

உற்றதொரு துன்பமென்றால் உதவி செய்து
 ஒன்றுக்கும் அஞ்சாதே என்று சொல்லும்
நற்றவத்து மாமாவே கண்டபோது
 நல்லவழி இதுவென்று போதிப்பீரே
உற்றனையே மரணமென்ற போதே நெஞ்சு
 உடைந்துருகி விட்டோமிச் சோகத் தாலே
குற்றுயிராய் ஆனோமே மாமா நாங்கள்
 குழறுமொழி கேட்காது போனீர் ஏனோ.

## பேறாமக்கள் இரங்கல்

கலங்கரைசேர் விளக்கிழந்த கப்பலானோம்
 கட்டியதோர் வலைப்பட்ட மானே யானோம்
நிலம்பிளந்துள் விழுந்தலறும் உயிர்களானோம்
 நிலைகெட்டுக் கதறுகிறோம் குடும்பம் காத்த
நலம்பெருகு குணக்குன்றாம் உம்மை நீக்கி
 நாமழவே வழியாச்சே மண்ணிலெங்கள்
குலம்புகழ நின்றிட்ட தந்தையே நாம்
 குழறவிட்டுப் போனதுமேன் வதைகிறோமே.

## மைத்துனர் மைத்துனிமார் இரங்கல்

உடன்பிறந்த சகோதரர்போற் பாசத் தோடு
 உலவியநம் மைத்துனரே வீடு தேடி
நடந்துவரக் கண்டதுமே வெளியே வந்து
 நாவினிக்க மனமினிக்கப் பேசுவீர்நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கியதே ஆவியென்ற போதே நெஞ்சம்
அனலிடையில் மெழுகாகி உருகி நொந்தோம்
படுந்துயரம் தொடர்கதையா யாக்கி விட்டுப்
பறந்தோடிப் போனதெங்கே அத்தா னையோ.

## பேரர் பேர்த்தியர் இரங்கல்

தத்தித் தவழ்ந்துவந் தாலரு காக இருக்கவைத்து
முத்தம் இருகன்னம் உச்சியெங் கும்தந்த அட்டப்பாவே
கத்திக் கதறிக் கலங்கிடக் கண்ணிமை மூடிவிட்டீர்
சித்தம் கலங்கித் திகைத்தழ எங்குநீ சென்றனையே.

உண்டிட இன்சுவை உண்டிகள் தந்தே உடைகொடுத்துக்
கொண்டதும் பாசம் பெருக வணைத்ததும் நாம்மறவோம்
கண்டதும் கையசைத் தேயழைப் பீரின்று சென்றதெங்கே
மண்டிய சோகம் மறைய வழியின்றி மாய்கிறமே.

## பீட்டப்பிள்ளைகள் இரங்கல்

கன்னம் குழிவிழக் கண்கூசிப் பிஞ்சு விரலசைத்து
என்னை எடுத்திடு என்றழைக் காமுன்னம் தூக்கிவைத்து
பொன்னின் வடிவென்றும் பேசும் பவளக் குவியலென்றும்
சொன்ன மொழியினிக் கேட்கவும் ஆமோ துடித்தனமே.

பாலைப் பருக்கினை பட்டுடை பூட்டினை நாமழுதால்
கோலப் படங்களை விண்ணிடைப் பம்பரைக் காட்டிடுவீர்
ஓலக் குரலுடன் ஊரவர் சுற்றி அழவகன்றீர்
ஞாலத் தினியெமக் காரினி அட்டப்பா ஏங்கினமே.

## சுற்றம் அயலவர் இரங்கல்

திறந்தமனம் மட்டுமல்ல கொண்டி ருந்தீர்
திறந்தகதவெமக்காக வைத்தி ருந்தீர்
மறந்துமொரு பிழையெவர்க்கும் செய்த தில்லை
மாறாகப் பலஉதவி செய்தி ருந்தீர்
அறந்தவறா அன்புவடி வான நீங்கள்
அடைந்தீர்கள் இறையடியை என்ற போது
சிறந்தோனே திகைத்துருகி வெம்பி னோம்நாம்
செயலிழந்தோம் தேம்பினோம் ஐயா ஐயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள் இரங்கல்

பேசுவதிற் கனிவிருக்கும் உதவி செய்து
பாதுகாத் திடநினைக்கும் நெஞ்ச முண்டு
தேசுடைய நாதனுன்தன் ஆவி போக
திகைத்தோமே புத்திமதி சொல்ல வல்லாய்
பாசமிகும் குடும்பத்தார் பதறு கின்றார்
பழகியநாம் உணர்வழிந்து திகைக்க விட்டு
ஈசனடி தேடினையோ இனிய பாதத்
தின்னமைதி உனக்கமைக சாந்தி சாந்தி.

## தேற்றம்

ஞானியர்கள் பண்பாளர் நம்மரிய மாவீரர்
ஊனுடல்விட் டேவிண் புகுந்திலரோ — ஏன்துயரம்
அன்பன் சிதம்பரநா தன்சிவனுக் காகினான்
துன்பம் தவிர்க இனி.

— பொற்கை கரண்

## நன்றி

எமது குடும்ப ஒளிவிளக்கு இறையடிப் பேறுற்ற வேளை நடந்த இறுதிக்கிரியை, அந்தியேட்டிக்கிரியைகளிற் கலந்துகொண்டோர், துக்கம் பகிர்ந்தோர், உடனிருந்து உதவினோர் அனைவர்க்கும் இதயநன்றி.

— மனைவி, மக்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவஸ்ரீ
அச்சகம்,
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org